SOND

இணைவோம். செயற்படுவோம். புதிய சமூகத்தினை உருவாக்குவோம்.
T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk

T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk web:-www.sond.lk

Face book:- Social Organizations Networking for Development - (SOND)

# மாதாந்த அறிக்கை

ஆடி, 2014.

## Social Organizations Networking for Development

RKM Road
Akkaraipattu

No. 19, Saravana Road
Kallady Batticaloa.

60" Arasady Road
Jaffna.

## இதழின் உள்ளே .........

1. அம்பாறை
2. யாழ்
3. மட்டக்களப்பு ஆகிய மூன்று மாவட்டங்களுடைய செயற்பாடுகள்

"We all will Create a Better World"

SOND

# அம்பாறை மாவட்டத்தின் செயற்பாடுகள்

## மொழிகள் உரிமைகள், மொழிச் சட்டம் தொடர்பான பயிற்சி

மொழிகள் திட்டத்தின் அனுசரையில் SOND அமைப்பினால் அம்பாறை மாவட்டத்தில் செயற்படும் கிராமமட்ட அமைப்புக்களுக்கான மொழிகள் ,உரிமைகள் மொழிச் சட்டபயிற்சி 2014.07.22 ல் அக்கரைப்பற்று SOND பயிற்சி நிலையத்தில் வளவாளர் சட்டத்தரணி றசீட் அவர்களினால் நடாத்தப்பட்டது. இப் பயிற்சியில் தமிழ் 15 முஸ்லீம் 3 சிங்களம் 6 உட்பட 24 பேர் கலந்து கொண்டு பயன் பெற்றுள்ளார்கள்.







## உறவுகளைக் கட்டியெழுப்புதல் பயிற்சி

மொழிகள் திட்டத்தின் அனுசரையில் SOND அமைப்பினால் அம்பாறை மாவட்டத்தில் உள்ள இளையோர்களுக்கான உறவுகளைக் கட்டியெழுப்பும் பயிற்சி 2014.07.23ம் திகதி அன்று அக்கரைப்பற்று SOND பயிற்சி நிலையத்தில் வளவாளர் தயாபரன் அவர்களினால் நடாத்தப்பட்டது. இப் பயிற்சியில் தமிழ் 14 முஸ்லீம் 3 சிங்களம் 6 உட்பட 23 பேர் கலந்து கொண்டு பயன் பெற்றுள்ளார்கள்.







**"We all will Create a Better World"**

# நிதியின்றிய செயற்திட்டம்

அரசசார்பற்ற நிறுவன மென்றால் அது நிதியோடுதான் செயற்படும் என்ற மாயை கற்றவரிடையே கூட உள்ளது. இக் கருத்தினை மாற்றி நிதியின்றி சிலரின் நேரத்தையும் எமது வளத்தையும் பயன்படுத்திச் செய்யப்படும் கீழ்வரும் செயற் திட்டங்கள் இவற்றிற்குநல் உதாரணங்களாகும்.

## சிறுவர் திட்டம்

சிறுவர் மேம்பாட்டினை மையமாகக் கொண்டு சிறுவர் திட்டம் எமது அமைப்பின் கீழ் நடைமுறைப்படுத்தி வருகின்றது. இச் செயற்பாட்டில் ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட தமிழ் , முஸ்லீம்,சிங்கள இனத்தினைச் சேர்ந்த 21 ஆண்,29 பெண் உள்ளடங்கலாக 50 சிறுவர்கள் இச் செயற்பாட்டில் இணைந்துள்ளார்கள். இம் மாதம் 3 கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டபோது 41 சிறுவர்கள் கலந்துகொண்டுள்ளார்கள்.

## சிறுவர்களினால் மேற்கொள்ளப்பட்டவிசேடசெயற்பாடுகள்.

இம் மாதம் சிறுவர்களினால் 3 நடமாடும் நூலகசேவை மேற்கொள்ளப்பட்டது. இதன் போது 60 புத்தகங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சிறுவர்களுக்கு 03 திரைப்படக்காட்சிகள் காண்பிக்கப்பட்டுள்ளது. இதில் 60 பேர் கலந்துகொண்டுள்ளார்கள்.

## SONDஅமைப்பினால் மேற்கொள்ளப்பட்டவிசேடசெயற்பாடுகள்.

. சிறுவர்களின் ஓய்வு நேரங்களை பயனுள்ள வழியில் கழிக்கும் வகையில் வாராந்த கலந்துரையாடலின் முடிவின் போது சிறுவர்கள் விளையாடுவதற்காக கரன்போட், கிரிக்கெட்மட்டை, ஸ்பிங் ஆகிய மூன்று வகையான விளையாட்டுப் பொருள் 05 தடவைகள் வழங்கப்பட்டது.

. சிறுவர்களுக்கு 03 திரைப்படக்காட்சிகள் காண்பிக்கப்பட்டுள்ளது. இதில் 60 பேர் கலந்துகொண்டுள்ளார்கள்.





**“We all will Create a Better World”**

SOND

# விவசாயப்பண்ணை

இயற்கை முறையிலான விவசாயம் தொடர்பான விழிப்புணர்வினை மக்களுக்கு ஏற்படுத்தலினை நோக்காகக் கொண்டு அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் தங்கவேலாயுதபுரம் எனும் கிராமத்தில் SOND அமைப்பினால் 11 ஏக்கர் விவசாயப் பண்ணையானது செயற்படுத்தப்பட்டு வருகின்றது. தற்போது இப் பண்ணையில் தென்னை, வாழை மரக்கறி பழ மரக்கன்றுகள் நடுகை பண்ணப்பட்டு மக்களிற்கு விற்பனைக்காக வழங்கப்படுகின்றது.





# தகவல் வளநிலையம்

சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலகசேவை செய்யப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் இம்மாதம் சிறுவர், இளையோர், நிறுவனப் பணியாளர்கள்,அரசாங்க ஊழியர்கள் ஆகியோர் 9 தலைப்பில் 218 புத்தகங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**“We all will Create a Better World”**

SOND

# யாழ் மாவட்டத்தின் செயற்பாடுகள்

## உறவுகளை கட்டியெழுப்பும் பயிற்சி

09.07.2014 அன்று இளைஞர்களுக்கிடையிலான உறவுகளை கட்டி யெழுப்பும் பயிற்சி நிகழ்வு SOND அலுவலகத்தில் நடைபெற்றிருந்தது. இந்நிகழ்வில் தெல்லிப்பளை, சண்டிலிப்பாய்,சங்கானை, கோப்பாய், வேலணை, கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களை சேர்ந்த இளைஞர் யுவதிகள் பங்கு கொண்டிருந்தனர்.





## மொழிகள் உரிமைகள், மொழிச் சட்டம் தொடர்பான பயிற்சி

மொழிகள் உரிமைகள் அடிப்படைஉரிமைகள் தொடர்பான விழிப்புணர்வு பயிற்சிநெறி எமது SOND அலுவலகத்தில் 19.07.2014 அன்று நடைபெற்றது. இதன்போது வழக்கறிஞர் மு.ரெமடியஸ் அவர்கள் வளதாரியாக பங்கு கொண்டிருந்தார். இதன்போது சமூகமட்ட அமைப்புக்கள் பங்கு கொண்டிருந்தனர்.





“We all will Create a Better World”

SOND

## பொருளாதார அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

13.07.2014 யாழ் மாவட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் எமது SOND அலுவலகத்தில் நடந்தபோது பேராசிரியர் சின்னத்தம்பி, முன்னாள் பல்கலைக்கழக துணைவேந்தர் மோகனதாஸ் மற்றும் கல்விமான்கள் சமூக சேவையாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.






## திரைப்படத் துறையினருக்கான கலந்துரையாடல்

**13.07.2014** ,27.07.2014 ம் திகதிகளில் திரைப்படத் துறையினருக்கான கலந்துரையாடல் துர்கா பயிற்சி நிறுவன இயக்குனர் ஜனனி அவர்களால் SOND அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் வளவாளரா கதிரு.ஞானதாஸ் அவர்களுடன் SOND நிறைவேற்றுப்பணிப்பாளர் திரு. செந்துராசா மற்றும் குழு உறுப்பினர்கள் திரைப்படத் துறையினர் ஆர்வலர்கள் யாவரும் கலந்து கொண்டனர் இதில் “பை” குறுந்திரைப்படம் திரையிடப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு விமர்சிக்கப்பட்டது.





**“We all will Create a Better World”**

SOND

# அனுபவப்பகிர்வு

14.07.2014 அன்று கிளி நெச்சி முறிப்பில் உள்ள நன்நீர் மீன் வளர்ப்புத் திட்டம் திருகோணமலையில் உள்ள அரசசார்பற்ற இணையம், மகாசக்தி, சுவாட் தலைமை அலுவலகம், அம்பாறை மாவட்ட அரசசார்பற்ற இணையம், சுவாட் திருக்கோவில் கிளை அலுவலகம் ஆகியன பார்வையிடப்பட்டதுடன் கண்டியில் உள்ள பெண்கள் அபிவிருத்தி நிலையமும் பார்வையிடப்பட்டது






# MRE செயற் திட்டம்

இம்மாதம் MRE செயற் திட்டத்தில் மிதி வெடியால் பாதிக்கப்பட்டவர்களுக்காக வழங்கப்பட்ட வாழ்வ உதவியின் தற்போதுள்ள நிலவரம் பற்றி MRE களப்பணியாளர்கள் மல்லாகம், கட்டுடை, மண்டதீவு அ கிராமங்களில் சென்று பார்வையிட்ட போது மல்லாகத்தில் உதவி பெற்ற பயனாளி ஒருவர் மாடுவளர்ப்பி மேற்கொண்டுள்ளதுடன் கட்டுடையில் உதவிபெற்ற பயனாளி கடை வைத்து பயன் பெற்று வருவதனை மண்டதீவில் உதவி பெற்ற பயனாளி தங்கூசிவலை வாங்கி கடற்தொழில் செய்து பயன் பெற்றுவருவதனை அவதானிக் முடிந்தது.

.

கோப்பாய் பிரதேசசெயலகப் பிரிவிலுள்ள இடைக்காட்டுப் பகுதியில் அக்கரை பிரதேசத்தில் களவியம் மேற் கொள்ளப்பட்டிருந்த போது MRE களப்பணியாளர்கள் மக்களை சந்தித்து MRE விழிப்புணர்வுவழங்குவதை இங்குஅவதானிக்கக்கூடியதாக இருக்கிறது





**"We all will Create a Better World"**

# தகவல் வளநிலையம்

இம்மாதம் எமது SOND அலுவலகத்திலுள்ள வள நிலையத்தில் சிறுவர்கள் இளைஞர்கள் உட்பட 13 தலைப்புக்களில் 69 புத்தகங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

எமது தகவல் வளநிலையத்தின் புத்தக பாவனையை அதிகரிக்கு முகமாகவும் மாணவர்களின் அறிவினை மேம்படுத்தும் வகையிலும் எமது பணியாளர்கள் பாடசாலை மட்டத்திலும் அரசஅலுவலகங்களிலிலும் நடமாடும் நூலக சேவையினை உருவாக்கும் வகையில் தற்போது ஒழுங்குகள் மேற்கொண்டு வருகின்றனர்.





**"We all will Create a Better World"**

SOND

# மட்டக்களப்பு மாவட்டத்தின் செயற்பாடுகள்

## காலநிலை மாற்றமும் சூழல் பாதுகாப்பும் (Climate Change & Environmental Protection)

காலநிலை மாற்றம் தொடா்பான செயற்பாடுகளில் காலநிலை மாற்ற செயற்பாட்டுக் குழுவினது 3வது அமா்வானது துறைசாா்ந்த அரசமற்றும் அரசசாா்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் 30 பேரை உள்ளடக்கியதாக நடைபெற்றது. இதன் போது மூன்று விதமான சமா்ப்பணங்கள் வழங்கப்பட்டது முதலாவது சமா்ப்பணமாக திரு. A. இருதயநாதன் அவா்கள் அனா்த்தங்களுக்கு தாக்குப் பிடிக்கக் கூடிய இயைபாக்கமுடைய சமுதாயத்தினை கட்டியெழுப்புதல் என்ற தலைப்பிலும் ,2வது சமா்ப்பணமாக மத்திய சுற்றாடல் அதிகார சபையினைச் சேர்ந்த திருமதி. பாஸ்கரன் அவர்கள் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் செயற்பாடுகளும்,சுற்றாடல் முன்னோடி படையணியின் செயற்பாடுகள் பற்றியும் ,3 வது சமா்ப்பணமாக கரையோரப் பாதுகாப்பு திணைக் களத்தினைச் சேர்ந்ததிருமதி. பாஸ்கரன் அவர்கள் தமது திணைக்களத்தினுடைய செயற்பாடுகளும்,கரையோரப் பாதுகாப்பும் என்ற தலைப்பிலும் அமைந்திருந்தது. அத்துடன் இக்குழுவினுடைய எதிர்கால செயற்பாடுகள் பற்றியும் மட்டக்களப்பில் காணப்படு கின்றசுற்றுச் சூழல் பிரச்சினைகள் தொடா்பாகவும் கலந்துரையாடல்களும் இடம்பெற்றது.






## பாலர் பாடசாலை

முன்பள்ளி ஆசிரியா்களுடனான சந்திப்பு அலுவலகத்தில் 2014.07.20 ம்திகதி இடம் பெற்றதுடன் அவா்களின் மாதாந்த முன்னேற்ற அறிக்கை பெறப்பட்டது. இதில் 3 பாடசாலைகளில் இருந்து 6 ஆசிரியர்கள் கலந்து கொண்டுள்ளார்கள்

**“We all will Create a Better World”**

SOND

# தகவல் வள நிலையம்

சொண்ட் அமைப்பானது சமூகத்தின் முன்னேற்றம் தொடர்பில் அரசமற்றும் சமுகமட்டஅமைப்புக்களுடன் இணைந்து சமூகமுன்னேற்ற செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது. குறிப்பாக நிதிசார்ந்த செயற்பாடுகளில் மாத்திரம் தங்கியிராது திட்டங்களுடன் இணைந்ததாக மக்களின் விருப்புமற்றும் தேவைகளை அறிந்து இலவச நூலகவசதி,மாணவர்கள் மற்றும் வளர்ந்தோருக்கான கணனி வகுப்புக்கள் என்பவற்றினையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் செயற்படுத்தி வருகின்றது. இந் நிலையில் வள நிலையம் மூலமாக July மாதம் 5 தலைப்பில் 50 புத்தகங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**"We all will Create a Better World"**

SOND




**“We all will Create a Better World”**